In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No.11/2021 Prosecution witness P.W.18

Name: Dhineshkumar Calling:

Father Name: Religion:

Village: Caste:

Taluk: Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 06-11-2023

**(Accused is present.)**

முதல் விசாரணை :-

நான் தற்போது தேனி மாவட்ட தனிப்பிரிவு குற்றப்புலனாய்வு துறை சார்பு ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். கடந்த 17.05.2020ம் தேதி 18.00 மணிக்கு பட்டி வீரன்பட்டி காவல் நிலைய பொறுப்பில் இருந்தபோது முத்தலாபுரம் காலனி தெருவைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி மனைவி கற்பகம் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்து பூர்வமாக கொடுத்த புகார் மனுவைப் பெற்று நிலைய கு.எண்.332/2020 Sec.341, 294(b), 302 IPC பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அதசாஆ.8. பின்னர் முதல் தகவல் அறிக்கையின் அசலையும், வாதியின் புகாரையும் இணைத்து த.கா.1190 ராமு என்பவர் மூலமாக கனம் நிலக்கோட்டை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களிடம் ஒப்படைக்க அனுப்பி வைத்தேன். மற்ற நகல்களை சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்தேன். வழக்கின் மேல்விசாரணைக்காக பட்டிவீரன்பட்டி காவல் ஆய்வாளர் அவர்களிடம் ஒரு நகலை சமர்ப்பித்தேன். என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-

நான் சொன்ன நேரத்தில் நான் சொல்வது போல், அசா1 காவல் நிலையம் வந்து என்னிடம் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்றாலும், அதன் தன்மைக்கேற்ப நான் சொன்ன விதத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றாலும் சரியல்ல. முதல் தகவல் அறிக்கையின் அசலை புகாருடன் இணைத்து உரிய நேரத்தில் நீதித்துறை நடுவரிடம் கொண்டு சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. அசா1 கொடுத்த பொய் புகாரின் பேரில் விசாரணை எதுவும் செய்யாமல் முதல் தகவல் அறிக்கையை எதிரி மீது பதிவு செய்தேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2023.11.06 17:47:21 +0530

Principal District Judge,
Dindigul.